இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 29-08-2025

# பீகாரில் பீறிடும் மக்கள் சக்தி!

பீகார் மாநிலத்தில் மாபெரும் மக்கள் பிரளயத்தையே உருவாக்கி வருகிறார்கள் ராகுல் காந்தியும், தேஜஸ்வீயும். மக்கள் சக்தியின் மகத்தான எழுச்சியை நேரில் சென்று பார்த்து வாழ்த்திவிட்டு வந்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

“உங்களை எல்லாம் பார்ப்பதற்காகத்தான் இரண்டாயிரம் கிலோ மீட்டர் கடந்து நான் இங்கே வந்திருக்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக, இந்தியாவே பீகாரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதுதான் பீகார் மக்களின் பலம்! ராகுல் காந்தியின் பலம்! தேஜஸ்வீயின் பலம்” என்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன போது கூட்டத்தில் இருந்து கைதட்டல் எழுந்தது.

**“பா.ஜ.க.வின் துரோக அரசியல் தோற்கப் போகிறது. தேர்தலுக்கு முன்பே உங்களின் வெற்றி உறுதியாகிவிட்டது! நீங்கள் இரண்டு பேரும் பீகாரில் பெறப்போகும் வெற்றிதான், இந்தியா கூட்டணியின் அடுத்தடுத்த வெற்றிகளுக்கு அடித்தளமாக அமைய இருக்கிறது. பீகார் சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் வெற்றி பெற்ற பிறகு நடைபெறும் வெற்றிவிழாக் கூட்டத்திலும் நிச்சயமாக - உறுதியாக நானும் பங்கேற்பேன்”** என்று சொல்லி விட்டு வந்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

சட்டமன்றத் தேர்தலுக்குத் தயாராகி வருகிறது பீகார் மாநிலம். அந்த மாநில முதலமைச்சர் நிதிஷ்குமாருக்கு பல்வேறு போக்குக் காட்டி அடக்கி வைத்திருக்கிறது பா.ஜ.க. நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையை எட்ட முடியாத பா.ஜ.க., நிதிஷ்குமாரின் ஆதரவை வைத்து இப்போது ஆட்சியில் இருக்கிறது. நிதிஷ்குமாரும் - பா.ஜ.க.வும் ஒருவருக்கொருவர் கையை விட்டால் கீழே விழுந்துவிடுவார்கள் என்ற நிலைமையில்தான் இருக்கிறார்கள்.

அதேநேரத்தில் பீகாரில் ராஷ்டீரிய ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த தேஜஸ்வீக்கான ஆதரவு அதிகமாகி வருகிறது. அவரோடு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் இணைந்து செல்வதால் காங்கிரஸ் - ஆர்.ஜே.டி. கூட்டணிதான் ஆட்சியைப் பிடிக்கும் என்ற கருத்துக்கணிப்புகள் வெளியாகி வருகின்றன. நேரடியாக மக்கள் செல்வாக்கைப் பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்று நினைக்கும் பா.ஜ.க., குறுக்கு வழியைப் பின்பற்றி வருகிறது. இதற்கு தேர்தல் ஆணையத்தை முழுமையாகப் பயன்படுத்தி வருகிறது.

‘வாக்காளர் அட்டை சீரமைப்பு’ என்ற பெயரால் 65 லட்சம் வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கப் பார்க்கிறார்கள். இதற்கு எதிராக ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கடுமையாகப் போராடி வருகிறார்கள். லாலுபிரசாத், ராகுல்காந்தி, தேஜஸ்வீ, பிரியங்கா ஆகியோர் பீகாரில் மக்கள் திரளை திரட்டி வருகிறார்கள்.

தேர்தல் ஆணையத்தை வைத்துக் கொண்டு பா.ஜ.க. எத்தகைய வாக்குத் திருட்டை நடத்துகிறது என்பதை அம்பலப்படுத்தினார் ராகுல் காந்தி. ஒரே ஒரு தொகுதியில் போலி வாக்காளர்கள், இல்லாத முகவரிகள், ஒரே முகவரியில் பதிவு செய்யப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள், செல்லாத புகைப்படங்கள், படிவம் 6-இன் தவறான பயன்பாடு ஆகியவற்றால் நடந்துள்ள மோசடிகளை ராகுல் காந்தி அம்பலப்படுத்தினார். இதற்கு முறையான ஒரு பதிலைக் கூட தேர்தல் ஆணையத்தால் சொல்ல முடியவில்லை. பதிலளிக்கத் தயாராக இல்லாத தேர்தல் ஆணையம், ராகுல் காந்தியை மிரட்டிக் கொண்டு இருக்கிறது. 30 நாள் சிறையில் இருந்தால் பதவி போய்விடும் என்று சட்டம் போட்டு மிரட்டிக் கொண்டிருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

இவை அனைத்துக்கும் எதிராக மாபெரும் மக்கள் சக்தியைத் திரட்டி வருகிறார் ராகுல் காந்தி. ‘வாக்காளர் அதிகாரப் பயணம்’ என்ற பயணத்தை பீகாரில் தொடங்கி உள்ளார்கள் ராகுல் காந்தியும், தேஜஸ்வீயும். இவர்கள் இருவரும் செல்லும் இடமெல்லாம் மக்கள் அலை அலையாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

‘நின்றால் மாநாடு, நடந்தால் ஊர்வலம்’ என்று சொல்லத்தக்க வகையில் தினந்தோறும் காட்சிகள் வந்து கொண்டிருக்கின்றன. தேஜஸ்வீ ஜீப் ஓட்ட அதில் ஏறி வலம் வந்தார் ராகுல் காந்தி. ராகுல் காந்தி - தேஜஸ்வீ பைக் பயணம் போனார்கள். ராகுல் பின்னால் பைக்கில் பிரியங்காவும் அமர்ந்து சென்றார். இவர்களுக்குப் பின்னால் பல்லாயிரக்கணக்கானவர்கள் பைக்கில் சென்றார்கள். பூர்னியா நகரில் வலம் வந்த போது தான் பயணித்த திறந்த வேனில் இருந்து இறங்கிய ராகுல் காந்தி, திடீரென ஹெல்மெட் அணிந்துகொண்டு, பைக்கில் ஏறினார். அவருக்குப் பின்னால் பீகார் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ராஜேஷ் குமார் ஏறிக்கொள்ள, தேஜஸ்வீ யாதவ் தனது பாதுகாப்பாளருடன் மற்றொரு பைக்கை ஓட்டினார். இவை இரண்டு கட்சித் தொண்டர்களையும் உற்சாகம் அடைய வைத்துள்ளது. இரண்டு மாபெரும் கட்சிகளின் கூட்டு, மக்களுக்கான பெரிய ஈர்ப்பாக அமைந்துள்ளது.

**“தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் ஏழைகளின் வாக்குகளைத் திருட பா.ஜ.க. விரும்புகிறது. பீகாரில் இது நடக்க, ‘இந்தியா’ கூட்டணி அனுமதிக்காது. அரசியலமைப்பு நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமைகளை உறுதி செய்கிறது. ஆனாலும் சிறப்பு தீவிர திருத்தம் அரசியலமைப்புக்கு எதிரானது. சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டாளிகளுக்கு பீகார் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்”** என்று பேசி வருகிறார் ராகுல்.

“உங்கள் வாக்குகளை மட்டும் பறிக்க நினைப்பதாகக் கருதாதீர்கள். உங்கள் இருப்பையே பறிக்க நினைக்கிறார்கள்” என்று தேஜஸ்வீ சொல்லி வருகிறார். ஜனநாயகமும், தேர்தல் முறையும் பா.ஜ.க.வால் சீரழிக்கப்பட்டு வருவதை அம்பலப்படுத்துவதாக இருக்கிறது இவர்கள் இருவரது உரையும்.

“ராகுலின் பயணம் இத்தனை ஈர்ப்புக்குரியதாக இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இது பா.ஜ.க.வின் பலவீனத்தையே காட்டுகிறது” என்று பா.ஜ.க.வினர் சிலர் இந்தி ஊடகங்களில் பேட்டி அளித்ததாகச் செய்தி வெளியாகி உள்ளது.

16 நாட்கள் நடைபெறும் இந்தப் பயணம், 20 மாவட்டங்களில் 1,300 கிலோமீட்டருக்கும் மேல் பயணம் செய்து பாட்னாவில் நிறைவடைய உள்ளது. இந்தியாவின் மிக முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், மாநில முதலமைச்சர்கள் பங்கேற்கிறார்கள். பீகாருக்கான எழுச்சியாக மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவுக்கான எழுச்சியாகவும் மாறிக் கொண்டிருக்கிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.8.2025) பீகார் மாநிலத்தில் நடைபெற்ற வாக்காளர் உரிமை பேரணியில் கலந்துகொண்ட பின்பு, ராகுல் காந்தி அவர்கள் தலைமையில் இந்தியா கூட்டணியின் சார்பில் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகளை கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சரும், ராஷ்டிரிய ஜனதா தள கட்சியின் தலைவருமான தேஜஸ்வி யாதவ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி பிரியங்கா காந்தி, கனிமொழி கருணாநிதி, கே.சி.வேணுகோபால் மற்றும் இந்தியா கூட்டணியின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

### எங்களுக்கு ஆதரவளிக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நம்மிடையே வந்துள்ளார்!

# வாக்குகளைத் திருடித்தான் பீகாரில் பா.ஜ.க. ஆட்சி அமைத்தது!

## பீகாரில் நடைபெற்ற பேரணியில் — ராகுல்காந்தி பேச்சு!

**முஸாஃபர்பூர், ஆக.29-**

**வாக்குத்திருட்டைக் கண்டித்து பீகார் மாநிலம் பாட்னாவில் நடைபெற்று வரும் பேரணியில் நேற்று முன்தினம் (27.8.2025) உரையாற்றிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பேசுகையில், வாக்குத் திருட்டிற்காக பிரதமர் மோடிக்கு தேர்தல் ஆணையம் உதவுகிறது என்றும், எங்களுக்கு ஆதரவளிக்க இன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் வந்துள்ளார் என்றும் குறிப்பிட்டார்.**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி பேசியது வருமாறு:-

இந்த யாத்திரையில் பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றனர். ஆனால் அது குறித்து யாரும் செய்தியில் கூறுவதில்லை.

அரசியல் சாசன புத்தகம் புனித நூல் ஆகும். இந்த சாசனத்தின்படிதான் வாக்குரிமை அனைவருக்கும் கிடைத்தது. இந்த அரசியல் சாசனத்தில் ஏராளமான சிந்தனைகள் உள்ளன. முதலமைச்சர் ஸ்டாலின் இங்கு நம்மிடையே வந்துள்ளார்.

**தந்தை பெரியாரின் சிந்தனை!**



தந்தை பெரியாரின் சிந்தனை இதில் உள்ளது நம்மிடையே வேணுகோபால் உள்ளார். நாம் பெரிதும் மதித்திடும் நாராயண குருஜி, அம்பேத்கர், புலே, காந்திஜி, புத்தர் உள்ளிட்டோரின் சிந்தனைகள் நிறைந்துள்ளன.

நரேந்திர மோடி வாக்குகளைத் திருடி தேர்தலில் வெற்றி பெறுகிறார் என்பதை நான் முழு உத்தரவாதத்துடன் சொல்வேன். நரேந்திர மோடி வாக்குகளைத் திருடுவதற்கு தேர்தல் ஆணையம் உதவி செய்கிறது. இந்தியாவில் உள்ள கார்ப்பரேட் ஊடகங்கள் மற்றும் முன்னணி நெறியாளர்களில் யாரேனும் தாழ்த்தப்பட்ட, ஒபிசி பிரிவை சேர்ந்தவர்கள் உள்ளனரா?

ஊடகங்களில் உள்ளவர்களும் பொய்யான செய்திகளை பரப்புகின்றனர். இந்த யாத்திரையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். ஆனால் அது குறித்து யாரும் செய்தியில் கூறுவதில்லை. இந்தியா-பாகிஸ்தான் போரின்போது அதிபர் டிரம்ப், பிரதமர் மோடியிடம் 24 மணி நேரத்திற்குள் தாக்குதலை நிறுத்திவிடுமாறு கேட்டுள்ளார் ஆனால் பிரதமர் மோடி 5 மணி நேரத்திலேயே போரை நிறுத்தி விட்டார்.

இந்த செய்தியெல்லாம் மீடியாக்களில் வராது. ஏனென்றால் மோடி, அதானி, அம்பானி அதன் உரிமையாளர்களாக உள்ளனர் எனது தரப்பிலோ, ஸ்டாலின் தரப்பிலோ, தேஜஸ்வி தரப்பிலோ ஊடகங்கள் இல்லை வாக்குத் திருட்டு என்பது, தாழ்த்தப்பட்ட, ஒபிசி, சிறுபான்மையினர் மற்றும் இந்தியாவின் ஏழை எளிய மக்களுக்கு எதிரான தாக்குதல் வாக்குகள் பறிபோன பிறகு ரேஷன் கார்டும், நிலமும் பறிபோகும் இதன் மூலம், அவமதிப்பு, வாய்ப்பு மறுப்பு, கல்வி மறுப்பு என சுதந்திரத்திற்கு முந்தைய காலம் திரும்பும்.

குஜராத்தில் சில பெயர் தெரியாத கட்சிகள் உள்ளன, அவற்றின் பெயர்களை யாரும் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால், அந்த கட்சிகள் ரூ. 4,300 கோடி மதிப்புள்ள நன்கொடைகளைப் பெற்றுள்ளன. இந்தக் கட்சிகள் மிகக் குறைந்த தேர்தல்களில் மட்டுமே போட்டியிட்டுள்ளன. குறைவாகவே செலவிட்டுள்ளன. இந்த ஆயிரக்கணக்கான கோடிகள் எங்கிருந்து வந்தன? கட்சிகளை யார் நடத்துகிறார்கள்? பணம் எங்கே போனது? தேர்தல் ஆணையம் விசாரிக்குமா? அல்லது இங்கும் பிரமாணப் பத்திரங்களைக் கேட்குமா? அல்லது இந்த முறையும் மறைக்கும் வகையில் சட்டத்தையே மாற்றுமா?”

வாக்குத் திருட்டை குஜராத்திலிருந்துதான் பாஜக ஆரம்பித்துள்ளது. உள்துறை அமைச்சர் அமித்ஷா, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னால், பாஜக இன்னும் 40-50 ஆண்டுகளுக்கு அதிகாரத்தில் இருக்கும் என்று பேசினார். அப்போது, நான் ஆச்சரியப்பட்டேன். பா.ஜ.க. வாக்குத் திருட்டில் ஈடுபடுவதால் அவர் அவ்வாறு சொல்லியிருக்கலாம்”.

இவ்வாறு ராகுல்காந்தி பேசினார்.

**அரசியல் சாசன புத்தகம் புனித நூல் ஆகும். இந்த சாசனத்தின் படிதான் வாக்குரிமை அனைவருக்கும் கிடைத்தது. இந்த அரசியல் சாசனத்தில் ஏராளமான சிந்தனைகள் உள்ளன. முதலமைச்சர் ஸ்டாலின் இங்கு நம்மிடையே வந்துள்ளார். தந்தை பெரியாரின் சிந்தனை இதில் உள்ளது.**

### இந்தியா கூட்டணியில் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்!

# நம் கரங்களை வலுப்படுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் இங்கு வந்துள்ளார்!

## பீகார் பேரணியில் — தேஜஸ்வி யாதவ் பேச்சு!

**முஸாஃபர்பூர், ஆக.29-**

**இந்தியா கூட்டணியில் நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம் என்றும் நம் கரங்களை வலுப்படுத்த இங்கு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வந்துள்ளார். அவரை வருக வருக என வரவேற்கிறேன் என்றும் ராஷ்ட்ரிய ஜனதா கட்சியின் முன்னணித் தலைவர் தேஜஸ்வி யாதவ் குறிப்பிட்டார்.**

பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் என்ற பெயரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது நாடுமுழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பாஜகவின் வாக்குத் திருட்டுக்கு எதிராக பீகாரில் ராகுல் காந்தி வாக்காளர் உரிமை யாத்திரையை கடந்த 17 ஆம் தேதி தொடங்கினார். 11வது நாளாக நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்காளர் உரிமை யாத்திரையில் திமுக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் பீகார் சென்று கலந்து கொண்டார். சென்னையில் இருந்து விமானத்தில் தர்பங்கா நகர் சென்ற முதலமைச்சர், முஸாபூர் மாவட்டத்தில் யாத்திரையில் பங்கேற்றார். அவரை காங்கிரஸ் பொதுச்செயலாளர் வேணுகோபால் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

**கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!**

அங்கிருந்து ஒரே வாகனத்தில் ராகுல் காந்தி மற்றும் தேஜஸ்வியுடன் யாத்திரையை தொடங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வழி நெடுகிலும் பல்லாயிரக்கணக்கான



மக்கள் திரண்டு நின்று உற்சாகத்துடன் வரவேற்றனர். பிரியங்கா காந்தி மற்றும் நாடாளுமன்ற திமுக குழு தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோரும் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

இங்கு நடைபெற்ற பேரணிப் பொதுக்கூட்டத்தில் ராஷ்ட்ரிய ஜனதா கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் பேசியது வருமாறு:-

பீகாரில் பொய் புரட்டுகள் நிறைந்த பாஜக கூட்டணி ஆட்சியை தூக்கி எறிய வேண்டும்.

பீகாரில் முற்றிலும் ஊழல் நிறைந்த ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. பீகாரில் பாஜக கூட்டணி ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை.

பிரதமர் மோடி தொடர்ந்து பொய்களை கூறி மக்களை ஏமாற்றி வருகிறார். நம் கரங்களை வலுப்படுத்தவே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இங்கு வந்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை வருக வருக என வரவேற்கிறேன். அவருக்கு நன்றி.

இவ்வாறு தேஜஸ்வி யாதவ் பேசினார்.

**நம் கரங்களை வலுப்படுத்தவே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இங்கு வந்துள்ளார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை வருக வருக என வரவேற்கிறேன். அவருக்கு நன்றி.**